Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகை யின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 68 | கர்த்தாவே, நியாயத்தை கேட்டருளும், என் கூப்பிடுதலைக் கவனியும், சங்.17:1 | செப்டம்பர் 2022 No.9

தூய ஆவியானவரின் மகிமையான நிரப்புதல்

The glorious filling of the Holy Spirit

Andrew Murray (1828-1917)

நீங்கள் விசுவாசிகளான போது, தூய ஆவியானவரைப் பெற்றுக் கொண்டீர்களா? அப்.19:1-2. இதை வாசிக்கிற ஒவ்வொருவரும் இருதயத்தை ஆராய்ந்து இக்கேள்வியினுக்குப் பதிலளிக்க வேண்டும். தேவன் நம்மிடம் ஆவலாய் எதிர்பார்க்கும் ஒன்று நாம் ஆவியால் நிரப்பப்பட்டு பெந்தெ கொஸ்தே நாளின் ஆசீர்வாதத்தை அனுபவிப்பதாகும். நமது வாழ்வை நிதானித்து, நமது பணி தேவனுக்கு முன்பாக எப்படியிருக்கிறது என்று பதிலளிப்போம்.

அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பட்டார்கள் *(அப்.2:4)*

நிரப்பப்படும் அனுபவத்தைக் குறித்து சிந்திக்கும்போது நமது எண்ணங்கள் பெந்தெகொஸ்தே நாளை நினைவுபடுத்துகிறது. அங்கே பரலோகி லிருந்து பரிசுத்த ஆவியானவர் ஆசீர் வாதங்களோடு மகிமையோடு இறங்கி வந்ததைத் தெளிவாகப் பார்க்கலாம்.

அவ்வேளையில் நிரப்பப்பட்ட வர்கள் அவரோடு மூன்று ஆண்டுகளுக்கு அதிகமாக நெருங்கி வாழ்ந்தவர்கள். அவர்களது பெலவீனங்கள், குறைகள், பாவங்கள், மீறுதல்கள் எல்லாம் நமக்கு வெளிப்படையாகத் தெரிகின்றன. இத்தகைய மக்களை அவர் நிரப்பினார். ஆனால் ஆவியால் நிரப்பப்பட்ட அனு பவம் அவர்களை முற்றிலும் மாற்ற மடையச் செய்தது. 'பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின' 2 கொரி.5:17. அவர்களைக் குறித்தும் அவர்கள் மாதிரிகளைக் குறித்தும் படிப்பது பலவழிகளில் நமக்கு நன்மை யானது. பெலவீனரும் பாவிகளுமாகிய நம்மையும் ஆவியானவர் நிரப்ப முடியும் என்பதையும் அந்த ஆசீர்வாதத்திற்காக அவர்கள் தங்களை ஆயத்தப்படுத்தி னார்கள் என்பதையும் கற்றுக் கொள்கி றோம்.

மேலும் தூய ஆவியானவர் முழுமையாகப் பெறப்படும்போது எத்தனை வல்லமையும் முழுமையுமான புரட்சி ஏற்படுகிறது என்பது மிக முக்கியமானது. எத்தனை மகிமையும் கிருபையும் நிறைந்த ஒரு அனுபவம் நமக்காகக் காத்திருக்கிறது என்பதையும் இந்த முழுமையான ஆசீர்வாதத்தைப் பெற நாம் முன்னேறிச் செல்வது அவசியம் எனவும் போதிக்கப் படுகி றோம்.

ஆண்டவராகிய இயேசுவின் நிலைத்திருப்பதும் அவர் உள்ளே வாசம் பண்ணுவதுமான அவரது சமூகம் :

இதுவே பெந்தெகோஸ்தே வாழ்வின் முக்கிய ஆசீர்வாதம். ஆண்ட வராகிய இயேசு இவ்வுலகில் வாழ்ந்த போது தமது சீஷருக்குப் போதிக்கவும், பயிற்சியளிக்கவும் அவர்களைப் புதுப் பித்து பரிசுத்தப்படுத்தவும் தவறவில்லை. பல சந்தர்ப்பங்களில் அவர்கள் மாற்ற மில்லாமலேயே இருந்தனர் ஏனெனில் இதுவரை கிறிஸ்து அவர்களுக்கு வெளியே நின்றார். அவருடைய வார்த்தையும் தாக்கமும் அவர்களில் கிரியை செய்யவில்லை. ஆனால் பெந்தெகொஸ்தே நாளில் இந்நிலை மாறியது.

பெந்தெகொஸ்தே நாளில் அவர் இறங்கி வந்து உள்ளே வாசம் பண்ணும் ஆவியானவராகவும் அவர்களது மிக ஆழமான பகுதிகளில் அவர்களின் ஜீவனின் ஜீவனாகவும் மாறிவிட்டார். நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன். உங்களிடத்தில் வருவேன் ..... நான் என் பிதாவிலும் நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள் (யோவா.14:18,20).

மற்ற அனைத்து ஆசீர்வாதங் களோடும் பெந்தெகொஸ்தே நாளில் வந்த ஆசீர்வாதங்களுக்கு இதுவே ஆதாரம். சிலுவையிலறையப்பட்ட வரும், மகிமைப்படுத்தப்பட்டவரும் பரலோகத்திலிருந்து வந்தவரும் ஆவிக்குரிய வல்லமையோடு இறங்கி வந்த ஆவியானவர் அவர்களுக்கு ஏற் கெனவே வாக்களிக்கப்பட்ட நிலையாக அவர்களில் வாசம் பண்ணும் ஆண்ட வரின் பிரசன்னத்தை அளித்தார். அதுவும் மிகவும் நெருக்கமானதும், வல்லமை யானதும், முற்றிலும் தெய்வீகமானது மான வாழ்வை அளித்தார். பூமியில் மாம்சத்தில் அவர்களோடு வாழ்ந்த அவர் ஆவியினால் பரலோக மகிமையை அவர் களுக்குள் அளித்தார். இதுவரை வெளிப் புறமாக வாழ்ந்த அவர் இப்போது அவர் களுக்குள் வாழ ஆரம்பித்துவிட்டார். இயேசுவின் ஆவி அவர்களில் ஜீவனாக வும் சுத்திகரிக்கும் வல்லமையாகவும் இறங்கி வந்தார்.

இது முக்கிய ஆசீர்வாதத்தி லிருந்து துளிர்க்கிறது. ஆண்டவர் அவர்களது பெருமைக்காக அடிக்கடி கண்டித்து தாழ்மைக்கு வழி நடத்தினார். ஆனால் பயன் ஏற்படவில்லை. அவரது உலக வாழ்வின் கடைசி இரவிலும் பரிசுத்த மேஜையண்டையில் அவர் களுக்குள் யார் பெரியவன் என்ற கேள்வி எழும்பியது லூக்.22:24.

அவர்களுக்கு வெளியே நட மாடிய கிறிஸ்துவின் போதனைகள் பல தாக்கங்களை ஏற்படுத்தினாலும் அவர் களுக்குள் வாசமாயிருந்த பாவத்தின் வலிமையிலிருந்து விடுவிக்க போதுமான தாயிருக்கவில்லை. அதனைப் பெற்றுக் கொள்ள உள்ளே வாசம் பண்ணுகிற கிறிஸ்துவால் மட்டுமே உதவி செய்ய முடியும். ஆக ஆண்டவராகிய இயேசு தூய ஆவியின் மூலம் அவர்களில் இறங்கிய போதுதான் அவர்கள் ஒரு முழுமையான மாற்றத்தைப் பெற்றனர். அவரை பரலோக தாழ்மையிலும், பிதாவுக்குக் கீழ்ப்படிகிறவராகவும், பிறருக்காகத் தம்மையே அர்ப்பணித்துத் தம் ஜீவனை அளிக்கிறவராகவும் பெற்றுக்கொண்டனர். அன்றிலிருந்து எல்லாம் மாறிவிட்டது. அந்த நிமிடமே தாழ்மையும் சாந்தமுமான ஆவி அவர்களை ஆட்கொண்டது.

பாவத்தை மேற்கொண்டு உண்மையான சுத்திகரிப்பை பெறு வதற்கு இன்றும் இதுவே வழி. அனேக பிரசங்கிமார்களும், கிறிஸ்தவர்களும் கூட தங்கள் மனதில் கிறிஸ்துவை வெளியே சிலுவையிலறையப்பட்ட வராகவோ, பரலோகத்தில் வீற்றிருப்பவ ராகவோ வைத்திருக்கிறார்கள். எனவே பெந்தெகொஸ்தே நம்மில் கொண்டு வருவதும், அவர் நம்மில் செயல்படுவதற் கேதுவானதுமான ஆசீர்வாதத்தைப் புரிந்து கொள்ளாமல் அவரது போதனை அவரது செயல்பாடு ஆகியவற்றின் ஆசீர்வாதத்திற்காகக் காத்திருக்கிறோம். எனவே வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுவதில்லை. தேவனே நமக்காக பரிசுத்தத்தை உண்டுபண்ணினார். அவர் ஜீவிக்கிறார். அவர் நமது இருதயத்தில் வாழ்ந்து கிரியை செய்கிறார் 1 கொரி.1:30.

தேவ அன்பால் இருதயம் நிரம்பி வழிதல்

இதுவும் பெந்தெகொஸ்தின் ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியே. பெருமைக்கு அடுத்ததாக அன்பின்மை என்பதுதான் ஆண்டவர் சீஷர்களைக் கடிந்து கொள்வதற்கேதுவான பாவ மாயிருந்தது. இந்த இரு பாவங்களுக்கும் வேர் ஒன்றேதான். நான் என்ற சுயத்தைத் தேடும், சுயத்தை சந்தோஷப்படுத்தும் ஆசைதான். புதிய கட்டளை என்று இயேசு தமது சீஷருக்கு அளித்ததும்

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.

மாதந்தோறும் தபாலில் / வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.

பத்திரிகை பணி

வாசகர் கடிதம்

1. Ref. : NI 00057 B

அன்புள்ள ஐயா, இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இத்துடன் பத்திரிகைக்காக காணிக்கை அனுப்பியுள்ளேன். எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

10.06.2022

2. KK 04361

அன்பு சகோதரர் அவர்களுக்கு, அன்பின் நல்வாழ்த்துக்கள். பத்திரிகை மற்றும் காலண்டர் கிடைத்தன. ஊழியங்களுக்காக ஜெபிக்கிறோம். இந்த சிறிய காணிக்கை ஏற்றுக் கொள்ளுங்கள்.

எங்களுக்காக ஜெபிக்கிறதற்காக மிக்க நன்றி. நாங்கள் உங்கள் ஊழியங்களுக்காகவும், சிறப்பாக **"எழுப்புதலுக்கான இதயக்கதறல்"** ஊழியங்களுக்காகவும் ஜெபிக்கிறோம். நன்றி, நல்வாழ்த்துக்கள், வணக்கம்.

அகஸ்தீஸ்வரம் *10.06.2022*

3. CN 00185

Dear brother, Herewith I am sending you a cheque for Rs.500/- towards the magazine Varugayin Thoothan for the years 2022-2024 for 2 years. Praying for your ministry.

13.06.2022

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவானாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2022 செப்டம்பர் மாத தூதனுக்காக என் தேவனை 'வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும்' துதிக்கிறேன் அப்.20:19. ஜூலை மாதம் 9-ம் தியதி சனிக்கிழமை நடைபெற்ற 7 மணி நேர உபவாச ஜெபத்தை ஆண்டவர் அதிகமாக ஆசீர்வதித்தார், ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். ஜூலை மாதம் 12-ம் தேதி இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன். முதலாவது வாசகர் சிலருடைய ஜெப வேண்டுகோள்களை அச்சிடுகிறேன்.

1. CB 00887

இந்த சகோதரியோடு இணைந்து நமது ஊழியத்திற்கு உதவி செய்கிற ஒரு சகோதரியின் கணவர், மரண வேளையில் இயேசுவை ஏற்றுக்கொண்டு மரித்துப்போனார். பிற மதத்தை சார்ந்த இவரது உடலை கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் பண்ணினார்கள் என்றும் அந்த சகோதரிக்காக ஜெபிக்கவும் பாரத்தோடு கேட்டுக் கொண்டார்கள்.

1 தெசலோனிக்கேயர் 4:13 முதல் 18 வரை வாசியுங்கள்.

அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போல துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை.

ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.

2. TR 03104

Dear brother,

Myself suffering from high fever. Kindly pray for recovery.

3. CN 03101

எனக்கு 82 வயது ஆகிறது. பலவிதமான சரீர பெல வீனங்கள் உண்டு. 10 ஆண்டுகளுக்கு மேலாக வயிற்று வலியால் பாதிக்கப்பட்டும் தேவ தயவு தாங்கி நடத்துகிறது. நான் பூரண பரிசுத்தம் அடையவும் உடலின் உபாதைகளிலிருந்து விடுதலை பெறவும் எனக்காக ஜெபிக்க வேண்டுகிறேன்.

* * *

பத்திரிகை பணி பற்றி இம்மாதம் விரிவாக எழுதுகிறேன். தேவனுடைய வசனம் இவ்வாறு கூறுகிறது : **"அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபோது, இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள்"**

"அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்" யோவான் 6:60, 66.

1955-ம் ஆண்டு எனது தகப்பனார் வருகையின் தூதன் பத்திரிகையை ஆரம்பித்து, 1957-ம் ஆண்டு மத்திய அரசின் பத்திரிகை துறை அலுவலகத்தில் 'செய்தித்தாள்' என்று பதிவு செய்தார்கள். காரணம், அரசில் பதிவு செய்யாமல் பத்திரிகை நடத்தக்கூடாது. இன்றைய கிறிஸ்தவ பத்திரிகைகள் அனைத்துமே 'செய்தித்தாள்' என்று மத்திய அரசில் பதிவு செய்யப்பட்டதே. சில மிஷனெரி பத்திரிகைகள் மாத்திரம் 'தனிச்சுற்றுக்கு மட்டும்' என்று அச்சிடப்பட்டு, நூல் அஞ்சல் (Book-Post) என்று அனுப்புகிறார்கள்.

பத்திரிகை துறையில் பதிவு செய்யும்போது, பத்திரிகை பற்றிய எல்லா விபரங்களும் தெரிவிக்கப்பட வேண்டும், அதில் ஒன்று தான் **"சந்தா"**. இலவச பத்திரிகைக்கு தபால் சலுகை கிடையாது.

எனது தகப்பனார் பதிவு செய்யும் போது சந்தா ரூபாய் 1.00 என்று பதிவு செய்தார்கள். அதையே அரசாங்கம் நமக்கு சான்றாக (Certificate) அளித்திருக்கிறது. சந்தாவை மாற்றும் ஒவ்வொரு தடவையும் அதை பத்திரிகை துறைக்கு தெரிவித்து மாற்ற வேண்டும். அதைச் செய்ய தவறினதால் இன்றைக்கு சந்தா ரூபாய் 1.00 என்று பத்திரிகையில் அச்சிட வேண்டியதாகிறது.

(7-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் தயவுசெய்து உங்கள் பத்திரிகை பதிவு எண், உங்கள் தொலைபேசி எண் இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்

தயவாய் உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்

SMS அனுப்ப : **9489740295, 95432 21008**

e-mail:varukayinthoothan@hotmail.com

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

தாங்கள் சீஷர் என்று காணப்படுதற்கு அடையாளமாயிருப்பதும் ஒருவரை ஒருவர் நேசிப்பது தான் யோவா.13:35.

நமக்கு சொந்தமானவர்களின் இருதயங்களில் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் மகிமையாக ஊற்றப்பட்டு வெளிப்பட்டார். விசுவாசிகளான திரள்கூட்டத்தார் ஒரு இருதயத்தோடும் ஒரு ஆத்துமாவோடும் கூடியிருந்தனர். அவர்களுக்கு இருந்தவைகளெல்லாம் பொதுவாக அனுபவிக்கப்பட்டன. ஒருவரும் எதையும் தனக்குரியதென்று சொல்லவில்லை. பரலோக ராஜ்யம் அன்பு என்னும் ஜீவனோடு அவர்களில் இறங்கியிருந்தது. ஆண்டவரின் அன்பு ஆவியாக அவர்களை நிரப்பியது. அவரே அவர்களுக்குள் வந்துவிட்டார்.

ஆவியானவரின் பலத்த கிரியையும், ஆண்டவர் நம்மில் வாசம் பண்ணுவதும் அன்பின் வாழ்வுடன் கட்டப்பட்டிருப்பதை பவுல் எபேசியருக்காக ஏறெடுக்கும் ஜெபத்தில் காணலாம். அவர்கள் ஆவியின் வல்லமையால் பலப்படுத்தப்பட்டு அதன் மூலம் கிறிஸ்து அவர்களில் வாசம் பண்ண ஜெபிக்கிறார். அதோடு "விசுவாசத்தினால் கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலை பெற்றவர்களாகி ..... அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும் ....." எபேசி.3:17-19 என்று எழுதுகிறார்.

ஆவியால் நிரப்பப்படுவதும் கிறிஸ்து நம்மில் வாசம் பண்ணுவதுமான வாழ்வின் வேர் அதின் சந்தோஷம், வலிமை, அன்பின் சான்று ஆகியவை கிறிஸ்து அவர்களில் வாழுவதனாலேயே. சபை பரலோக தனிமத்தை தன் வாழ்வில் பெற்று, ஆவியால் நிரப்பப்பட்டு கிறிஸ்து அதில் வாசம் பண்ணுவதை உலகம் காணுமானால் சபை தேவ அன்பால் நிரம்பி வழியும் அனுபவம் தேவனுடைய வாக்குத்தத்தம் என்று உணர முடியும். ஆவியானவரின் வருகை பலவீனத்தையும் பயத்தையும் தைரியமாகவும் வலிமையாகவும் மாற்றிவிட்டது.

பேதுரு பயத்தால் ஒரு பெண்ணின் முன்னால் இயேசுவை மறுதலித்ததையும், அதே இரவில் சீஷர்கள் இயேசுவை விட்டு ஓடிப்போனதையும் நாம் அறிவோம். அவர்களுடைய இருதயங்கள் அவருடன் இணைந்திருந்தாலும், அவரோடு சென்று மரிக்க ஆயத்தமாயிருந்தாலும் இக்கட்டான வேளை வந்த போது தைரியமும் வல்லமையும் இழந்துபோயின. அவர்கள் "நன்மை செய்ய வேண்டுமென்ற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை" ரோமர் 7:18 என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர்.

ஆனால் பெந்தெகொஸ்தின் ஆசீர்வாதத்திற்குப் பின்பு விருப்பமும் செயலும் கேள்விக்குறியாகவில்லை. கிறிஸ்து நம்மில் வாசம் பண்ணுவதால் தேவன் விருப்பம், செயல் ஆகிய இரண்டிலும் செயல்படுகிறார் பிலி.2:13. எதிரிகளான ஆயிரக்கணக்கான யூதருக்கு முன்பாகப் பேதுரு சிலுவையிலறையப்பட்ட இயேசுவைக் குறித்துப் பேச எப்படி தைரியம் பெற்றான்? ஜனங்களின் தலைவர்களிடம் "மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" அப்.5:29 என்று சொல்லும் தைரியம் கிடைத்தது எப்படி?

ஸ்தேவான், பவுல் இன்னும் அனேகர் பயமுறுத்தல், பாடு, மரணம் ஆகியவற்றை தைரியத்தோடும் சந்தோஷத்தோடும் வெற்றியோடும் எதிர் கொண்டது எப்படி? வெற்றி வீரரான கிறிஸ்துவின் ஆவியே காரணம். ஆம் கிறிஸ்து தாமே அவர்களில் வாசம் பண்ணினார். பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தின் சந்தோஷம் இயேசுவுக்காகப் பேச தைரியமும் வலிமையும் தருகிறது. ஏனெனில் இருதயம் முழுவதும் அவரால் நிரம்பியிருக்கிறது.

பெந்தெகொஸ்தின் ஆசீர்வாதம் வேதவசனம் முழுவதையும் புதிதாக்குகிறது :

சீஷர்களின் வாழ்வில் இந்த சத்தியம் தெளிவாகத் தெரிகிறது. அன்றைய யூதர்களைப் போல மேசியாவைக் குறித்த அவர்களது அபிப்பிராயம் மற்றும் தேவராஜ்யத்தைக் குறித்த எண்ணம் முற்றிலும் மாம்சீகமானதும் மேற்படையானதுமாயிருந்தது. ஆண்டவராகிய இயேசு 3 ஆண்டுகளாகக் கொடுத்த போதனைகள் அவற்றிலிருந்து அவர்களை விடுவிக்கவில்லை. அவர்கள் அந்த உபதேசங்களை (பாடு மரணம், தேவ ராஜ்யம்) ஆகியவற்றைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு கூட அவர்களுடைய அவிசுவாசத்திற்காகவும், பின்மாற்றத்திற்காகவும், வேத வசனங்களைப் புரிந்துகொள்ள முடியாத நிலைக்காகவும் அவர்களை கடிந்து கொண்டிருக்கிறார்.

ஆனால் பெந்தெகொஸ்தின் நாளின் மூலம் ஒரு முழுமையான மாற்றம் ஏற்பட்டது. ஆதிகால வேத வாக்கியங்கள் அவர்களுக்கு முன்பாகத் திறக்கப்பட்டன. தூய ஆவியானவரின் ஒளி வசனத்தை ஒளிரச் செய்தது. பேதுரு ஸ்தேவான் ஆகியோருடைய பிரசங்கங்களிலும், பவுல், யாக்கோபு ஆகியோருடைய முகவுரையிலும் பழைய ஏற்பாட்டின் வார்த்தை மீது தேவ ஒளி பிரகாசிப்பதைக் காணலாம். அவர்கள் எல்லாவற்றையும் இயேசுவின் ஆவியானவர் மூலம் கண்டார்கள். இயேசு அவர்களில் வாசம் பண்ணினார்.

இவ்வாறு நம்மிலும் அவர் வாசம் பண்ணுவார். நாம் வேத வசனங்களைப் படித்து அவற்றை தியானம் பண்ணி மூளையிலும், இருதயத்திலும், அனுதின நடக்கையிலும் பயன்படுத்த வேண்டும். நாம் ஆவியால் நிரப்பப்பட்டிருந்தால் மட்டுமே சரியாகவும் முழுமையாகவும் இந்த ஆவிக்குரிய வல்லமையையும், வசனத்தின் சத்தியத்தையும் அனுபவிக்க முடியும். அவர் 'சத்திய ஆவியானவர்'. அவர் நம்மில் வாசம் பண்ணும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார் (யோவா.14:17; 16:13).

பிறரை ஆசீர்வதிக்கும் ஆசீர்வாதத்தை பெற்றுகொள்ளுதே நமக்கு சிறந்தது :

உயர்த்தப்பட்ட இயேசுவின் வல்லமை மேற்குறிப்பிட்ட ஆசீர்வாதங்களை அறிவிக்கும்படியாக அனுப்பப்படுகிற ஊழியக்காரர் மூலமாக மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் பயிற்சிக்கப்படுகின்றன. சுவிசேஷ ஊழியன் இயேசுவின் மூலம் மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அறிவித்து ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண இயேசுவின் ஆவியின் வல்லமையால் அதைச் செய்ய வேண்டும்.

ஆனால் பாவ மன்னிப்பு, மறுபிறப்பு ஆகியவை பிரசங்கிக்கப்பட்டும் பயனற்றுப் போகக் காரணம் அவை தத்துவங்களாக மட்டுமே போதிக்கப்படுகின்றன. மனித முயற்சியும், பேச்சு வன்மையும், விவாதமும் மக்களைக் கவரும் ஆயுதங்களாக பயன்படுத்துப்படுகின்றன. ஆனால் அவைகளால் எந்த ஆசீர்வாதமும் கிடைப்பதில்லை.

மனிதனுக்கு தேவ ஆவியால் நிரப்பப்பட வேண்டும் என்ற ஆசை முக்கியமாக வேண்டும். தன்னில் வாசம் பண்ணும் கிறிஸ்துவால் தேவன் பேசுவார் என்றும் கிரியை செய்வார் என்றும் விசுவாசிக்க வேண்டும். அப்போதுதான் அவன் ஆசீர்வாதம் பெற முடியும். இந்த ஆசீர்வாதம் ஒரே விதமாகவும் ஒரே அளவிலும் கொடுக்கப்படுவதில்லை. ஆனால் அது வந்து சேருவது நிச்சயம். "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனிடமிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்று இயேசு கூறினார். இது தூய ஆவியான வரைக் குறித்து குறிப்பிடப்பட்டதாகும். தூய ஆவியால் நிரப்பப்பட்ட இருதயம் ஆவியால் நிரம்பி வழியும். கிறிஸ்துவின் சபை எப்படியிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ அப்படியிருக்க பெந்தெகொஸ்தே ஆசீர்வாதம் ஏதுவாகிறது.

தனிப்பட்ட நபர்களில் ஆவியானவர் என்ன செய்கிறார் என்று கற்றுக்கொண்டோம். அப்படியானால் சபை முழுவதும் இதனைப் பெற்றுக் கொள்ளும்போது அது ஏற்படுத்தும் தாக்கம் எத்தகையது? கிறிஸ்துவின் சரீரம் முழுவதும் இந்த அனுபவத்தைப் பெறுவது அவசியம்.

"ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூட பாடுபடும்" 1 கொரி.12:26. ஒரு சபையின் அனேக அங்கத்தினர் இந்த ஆசீர்வாதத்தைப் பெறாவிட்டால் சபை முழுவதும் அதினால் பாதிப்படையும். தனிப்பட்ட சீஷர்களிலும் ஆசீர்வாதம் முழுமையாக வெளிப்பட முடியாது. எனவே நாம் நம்மைச் சுற்றி உள்ளவர்களையும் சபையையும் உலகம் முழுவதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

எருசலேமில் அன்று கூடி வந்த திருச்சபை 120 மக்களை மட்டுமே உடையதாயிருந்தது. அவர்களில் பெரும் பாலோனோர் படிப்பறியாதவர்களும், ஆயக்காரரும், மீனவர்களும், எளிமை யான பெண்களும், புறக்கணிக்கப்பட்ட வர்களுமாயிருந்தனர் அப்.1:15. ஆனா லும் இவர்கள் மூலமாகவே தேவனு டைய ராஜ்யம் அறிவிக்கப்பட்டு விஸ்தாரமடைய வேண்டும், அது அப்படியே நடந்தது. அவர்களும் அவர்களோடு சேர்க்கப்பட்டவர்களும் இணைந்து யூத தப்பபிப்பிராயங் களையும் அன்னிய தேவர்களின் கடின தன்மைகளையும் மேற்கொண்டு தேவ னுடைய சபை மகிமையாய் வெற்றி சிறந்தது.

ஆதித் திருச்சபை ஆவியால் நிரப்பப்பட்டயடியால்தான் இந்த விளைவு ஏற்பட்டது. அதின் அங்கத் தினர் தங்களை முற்றிலுமாக ஆண்ட வருக்கு அர்ப்பணித்திருந்தனர். அவர்கள் தாங்கள் நிரப்பப்படவும், சுத்திகரிக் கப்படவும், ஆளப்படவும் அர்ப்பணித் தனர். அவருடைய வல்லமையின் ஆயுதங்களாகத் தங்களை அளித்தனர். ஆவியானவர் அவர்களில் தங்கி அற்புத மாகக் கிரியை நடப்பித்தார்.

இந்த நிலை இன்றைய திருச் சபையில் ஏற்பட வேண்டும். அப்படி யானால் மட்டுமே சபை இன்றைய கலாச்சாரம், சிலைவணக்கம், பாவம், உலகம் ஆகியவற்றிலிருந்து தப்ப முடியும். சபை ஆவியால் நிரப்பப்பட வேண்டும்.

தேவையான ஒன்று (லூக்.10:42) :

நாம் அனைவரும், சபையும் ஆவியால் நிரப்பப்பட வேண்டும். அதற்கு முன் நாம் தேடி கண்டுபிடிக்க வேண்டும். அவருக்காகக் காத்திருக்கிற வர்கள் எண்ணிப்பாராத ஆசீர்வாதங் களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த சந்தோஷத்தை நீங்கள் சொந்த அனுபவமாக்கிவிட்டீர்களா, இயேசு உங்கள் உள்ளத்தில் வந்துவிட் டாரா, பரிசுத்தமும் தாழ்மையுமான ஆவியானவர் உங்களில் தங்கியிருக் கிறாரா, அன்பு, சுயதியாகம், தைரியம், வல்லமை ஆகியவை இயற்கையாகவே உங்களிலிருந்து வெளிப்படுகிறதா, தேவவசனம் வெளிச்சமாகவும் வல்லமை யாகவுமிருந்து அதை சுற்றிலுமுள்ள வர்களுக்குக் காண்பிக்க முடிகிறதா, சபை மணவாட்டியின் அலங்காரத் துடன் விளங்குகிறதா, அப்படியானால் தீமையை விட்டு விலகுங்கள். உங்கள் இருதயத்திலிருந்து எல்லாத் தீமைகளை யும் அகற்றி ஆவியால் நிரப்பப்படும் ஒரே ஆவலுடனிருங்கள். அது உங்கள் உரிமை. அதைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளுங்கள். விசுவாசத்தை விட்டு விடாதிருங்கள்.

பரிசுத்த வாழ்வுக்கான வாஞ்சை

The passion for holiness

Nancy DeMoss Wolgemuth

இருபதாம் நூற்றாண்டில் காணப்பட்ட அடக்கு முறையாளர் களில் தீவிரமானவரும், நேர்மையற்ற வரும், சர்வாதிகாரியுமான ஆட்சியாளர் நிக்கோலே சீசஸ்கு என்ற இரும்பு கரங் கொண்டவரின் ஆட்சியில் ரோமானிய மக்கள் இருபது ஆண்டுகளுக்கு மேலாக பாடுபட்டு வந்தனர். குறிப்பாகக் கிறிஸ்தவர்கள் குறியாக்கப்பட்டு கொடுமைக்குள்ளாக்கப்பட்டனர். விசுவாசிகளும், ஊழியர்களும் நிந்திக்கப் பட்டனர்.

1969-ம் ஆண்டில், அரசு டிமிசோரா என்ற இடத்திலுள்ள ஒரு போதகரின் பிரசங்கிக்கும் உரிமத்தை ரத்து செய்தது. எந்த ஒரு பணியுமில்லாத நிலையில் அப்போதகர் கடுதாசியினா லான பைகளை தயாரித்துக் குடும்பத்தை ஆதரிக்க வேண்டியதாயிற்று. நான்கு ஆண்டுகளாக இப்பணியுடன் எழுப்பு தலுக்காக ஜெபித்தார். 1973-ம் ஆண்டில் ஆச்சரியமாக அவரது உரிமம் திரும்பக் கிடைத்தது. ஒரேடியாவிலுள்ள இரண்டாம் பாப்திஸ்து சபையில் அவர் போதகராக நியமிக்கப்பட்டார்.

ஆரம்பத்திலிருந்தே அவரது ஊழியம் ஜெபத்திற்கு அதிக முக்கியத் துவம் கொடுப்பதாயிருந்தது. சபை அங்கத்தினர் தங்கள் குடும்ப அங்கத் தினர், நண்பர்கள், உடன் பணிபுரிவோர் ஆகியோரின் இரட்சிப்புக்காக ஜெபிக் கும்படி உற்சாகப்படுத்தப்பட்டனர்.

அவரது பாரம் சபைக்கு வெளியேயிருந்தாலும் அவர் பல ஆண்டுகளாக வாஞ்சித்து ஜெபித்துக் கொண்டிருந்த எழுப்புதல் தனது சபையில் ஆரம்பிக்க விரும்பினார். ஜனங் களிடம் அவர் அவிசுவாசிகள் மட்டுமல்ல 'மனந்திரும்பியவர்கள்' மனந்திரும்ப வேண்டும் என்று வற்புறுத்தினார்.

அவர் நேரடியாகவே 'மனந்திரும் பியவர்கள்' என்று கூறப்பட்டவர் களிடம் காணப்பட்ட வழக்கமான பாவங்களைச் சுட்டிக் காண்பித்து, அவை சபை உண்மையான எழுப்புதலைப் பெற்றுக்கொள்ள தடையாக இருப்ப தாகவும் தாம் நம்புவதாகக் கூறினார்.

சன்மார்க்க நெறியில் தடுமாறும் இந்நாட்களில், மக்கள் தாங்கள் சரி என்பதை சரி என்றே எடுத்துக் கொள் கிறார்கள். எனவே இந்த போதகர் சபையில் எடுத்துக் கொண்ட முடிவுகள் அநேகருக்குக் குழப்பமாயிருந்தது.

எடுத்துக்காட்டாக நாட்டிற் குரிய பொருளைக் களவாடக்கூடாது என்று அவர் போதித்தார். அரசாங்கம் நிலங்கள், தொழிற்சாலைகள் போன்ற வற்றில் கிடைக்கும் வருமானம் முழுவதையும் வட்டாயமாகப் பறிமுதல் செய்து வந்தது. மக்கள் தங்கள் சொந்த நிலத்திலும் தொழிற்சாலைகளிலும் தங்களுக்கு உரியது என ஒரு பகுதியை எடுத்துக்கொண்டனர். போதகர் அவர் களிடம் அரசாங்கத்திடம் அவர்கள் திருடக்கூடாது என போதித்தார்.

இன்னொன்று மதுபானங் களைப் பயன்படுத்துவதைக் குறித்ததா கும். ஒரேடியா பகுதி அனேக திராட்சைத் தோட்டங்களை உடையது. விசுவாசி களுக்கிடையில் மதுபானம் குடிப்பது அங்கீகரிக்கப்பட்டிருந்த கலாச்சாரமா யிருந்தது. போதகரோ மதுபானம் அருந்துவது பாவத்திற்கு வழிநடத்தும் என்று விசுவாசித்தபடியால் விசுவாசிகள் அப்பழக்கத்தை விட்டு விடுவோமென உறுதி எடுக்க சவால் விட்டார்.

இன்றைய அனேக சுவிசேஷ கர்களும் இந்தப் பழக்கம் பாவம் என்று ஒத்துக்கொள்ள தயங்கலாம். ஆனால் மனந்திரும்பியவர்கள் தேவனுக்குப் பிரியமற்றவைகளிலிருந்து திரும்பிவிட வேண்டியதும் தூய்மையைக் கடை பிடிக்க வேண்டியதும் மிகவும் அவசியம்.

எனவே அப்படி அம்மக்கள் அவற்றை விட்டுவிட்ட போது தேவன் எழுப்புதலைக் கட்டளையிட்டார். ஆறு மாதங்கள் பிரசங்கித்து, ஜெபிக்கச்செய்து, மனந்திரும்பச் செய்த பின்பு பலன் ஏற்பட்டது. மக்கள் கழுகி சுத்திகரிக்கப் பட்டனர். அனேக அவிசுவாசிகள் மனந் திரும்பினர். எழுப்புதல் ஏற்படு முன் வருடாவருடம் 10 புதிய விசுவாசிகள் சபைக்குள் வந்தனர். 1974 ஜூன் முதல் டிசம்பர் வரை 250 மக்கள் ஞானஸ்நானம் பெற்று விசுவாசிகளாயினர். தொடர்ந்து இரண்டு ஆண்டுகளில் 400 பேர் விசுவாசத்திற்குள் வந்தனர். கிறிஸ்துவை பகிரங்கமாக அறிக்கை செய்கிறவர்கள் இரத்த சாட்சிகளாக மரிக்க ஆயத்தமா யிருந்தனர்.

எழுப்புதல் இந்த சபையில் மட்டுமல்ல, நாடு முழுவதும் பரவியது. எழுப்புதலடைந்த விசுவாசிகள் கிறிஸ்து வுக்காக தைரியமாக நின்றனர். 15 ஆண்டுகளில் சீசெஸ்குவின் ஆட்சி முடிவுக்கு வர தேவ ஜனங்கள் மத்தியில் ஏற்பட்ட எழுப்புதலின் நெருப்பு காரணமாயிருந்தது.

புதிய அங்கத்தினர்களை சேர்த்துக் கொள்வதற்காக அவர்களைக் கவர்ந்துகொள்ள அவர்கள் வழியிலே சாய்வது இன்று திருச்சபைகளில் காணப் படும் குறைபாடு. நாம் வித்தியாசமான வர்கள் என்பதை நாம் காண்பிக்க விரும்புவதில்லை. அவிசுவாசிகள் நம்மை அளவு கடந்தவர்கள், அதிக ஆவிக்குரிய வர்கள் என்று கூறிவிடுவார்கள் என்று பயப்படுகிறோம். ஆனால் நேர்மாறாக ஒரேடியா சபையார் உலகத்திலிருந்து வேறுபட்டவர்கள். முன்பு அவர்களை வெறுத்தவர்களும் அவர்களோடு கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டனர்.

நாம் உலக மக்களை கிறிஸ்து விடம் கொண்டு வருவதற்குப் பதிலாக நாம் உலகத்திற்குள் புகுந்துவிட்டோம்.

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

நமது மிகப்பெரிய தாக்கம் உலகத்தின் வேஷம் தரிப்பதால் ஏற்படக் போவ தில்லை. ஆனால் நாம் உலகத்தை விட்டு வேறுபட்டு இயேசுவைப் போல் வாழ்வ தால் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

வாய்ப்புகளும் செயல்பாடுகளும் குறைந்து போனபடியால் எழுப்புதல் ஏற்பட வில்லை என்று சொல்ல முடியாது. இன்று அதிக அளவிலான மாநாடுகள், திட்டங்கள், ஊடகங்கள், பல்வேறு நிகழ்வுகள், புத்தகங்கள், ஒலி மற்றும் ஒளி நாடாக்கள், பத்திரிகைகள், ரேடியோ, டிவி போன்ற பல்வேறு ஊழியங்கள் எக்காலமுமில்லாத அளவுக்கு நடை பெற்று வருகின்றன. அனேக ஜெபக் கூடுகைகளும், நிகழ்வுகளும் ஆவிக்குரிய எழுப்புதலுக்கு நேராக வழிநடத்து கின்றன. ஆனால் ஏதோ ஒன்று குறைவு படுகிறது.

ஒரு ஊழிய தலைவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் : "திரள்திரளான மக்கள் ஜெபித்துக் கொண்டிருக்கின்ற னர்; அனேகர் மனந்திரும்புகின்றனர்; ஆனால் மிகச் சிலருடைய வாழ்வில் மட்டுமே மாறுதல் ஏற்பட்டுள்ளது". இதைக் கேட்ட போது எனது மனதில் தோன்றியது என்னவெனில், மக்கள் தங்கள் வாழ்க்கை முறையைப் மாற்றா விடில், நிச்சயமாக அவர்கள் மனந்திரும்பி யிருக்க முடியாது என்பதே. அப்படி நாம் மனந்திரும்பாவிட்டால் நமது பாடல் களாலும், துதிகளாலும், ஜெபங்களாலும் எந்த பயனுமில்லை. நாம் நன்றாயிருக்கி றோமென்று நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம்.

பரிசுத்த வாழ்வை முக்கியமானதாக்கிக் கொள்வோம்

தூய்மை நமக்கு எவ்வளவு முக்கியமானது? பரிசுத்த வாழ்வைப் பெற எவ்வளவு சிந்தை, கவனம், முயற்சி ஆகியவற்றை செலுத்துகிறோம்? தேவனைப் பிரியப்படுத்தாதவைகள், தூய வாழ்வுக்கு தடையானவைகள் போன்றவற்றைத் தள்ளிவிட முயற்சிக் கிறோமா? பரிசுத்தமாக வாழ்வது முதன்மையாயிருக்கட்டும்! அதுவே உங்கள் நோக்கமாயிருக்கட்டும்.

உங்கள் பிள்ளைகளின் தூய வாழ்வு உங்களுக்கு முக்கியமானதாயிருக்கிறதா? அவர் களுடைய இருதய சுத்தம், வாழ்வின் பரிசுத்தம் ஆகிய வற்றைவிட அவர்களுடைய மதிப்பெண்கள், திறமை, சம்பாதிக்கும் அளவு ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறீர்களே! தேவ பயத்தோடு அவர்களை வளரச் செய்கிறீர்களா? அவர்கள் பாவம் செய்யும்போது முழங்கால்களில் நிற்கிறீர்களா? உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல இருதயத்தைக் கொடுக்கும்படி தேவனிடம் மன்றாடுகிறீர்களா? பிள்ளைகளிடம் மனந்திரும்பும்படி கெஞ்சுகிறீர்களா?

கிறிஸ்துவின் சரீரமாகிய சபை யின் பரிசுத்த வாழ்வைக் குறித்த உங்கள் கரிசனை என்ன?

வாய்ப்புகளும் செயல்பாடுகளும் குறைந்து போனபடியால் எழுப்புதல் ஏற்படவில்லை என்று சொல்ல முடியாது.

- **கிறிஸ்தவர்கள் அன்பற்றவர்களும், மன்னியா தவர்களுமாயிருக்கிறார்களே.**
- **கிறிஸ்தவர்கள் வீண்பேச்சு பேசுகிறவர்களா கவும், போஜனப் பிரியர்களாகவும் இருக்கிறார் களே.**
- **ஆவிக்குரிய ஜசுவரியங்கள், தேவனைப் பிரியப்படுத்துதல் போன்றவற்றை விட்டு விட்டு உலகப் பொக்கிஷங்களில் அதிக நாட்டம் கொள்கிறார்களே.**
- **பெற்றோரை கனம் பண்ணாமலும், கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் விவாகரத்து செய்கிறதும் காணப்படுகிறதே.**
- **தங்களுக்கானவைகளையே சிந்தித்து, தங்களையே வார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.**
- **சண்டையிடுகிறவர்களாகவும், சச்சரவு பண்ணுகிறவர்களாகவுமிருக்கிறார்களே.**
- **நிந்திக்கிறவர்களாகவும், கேடான காரியங்களில் ஈடுபடுகிறவர்களாகவும் இருக்கிறார்கள்.**
- **பாவம் செய்தாலும் வெட்கப்படாமலிருக்கி றார்கள்.**

இந்நாட்களில் பரிசுத்தத்தை நாம் நாட வேண்டாமா? நமது சபை களில் இன்னொரு முறை தேவ பிரசன்னம் வெளிப்பட வேண்டாமா? தேவன் ஆச்சரியமாக திரள்கூட்டமான மக்களை பாவத்திலிருந்து மீட்டு கிறிஸ்துவின் விசுவாசத்தில் கொண்டு வர வேண்டாமா?

C.H. ஸ்பர்ஜன் இவ்வாறு குறிப் பிடுகிறார்: "கிறிஸ்துவின் சபை பரிசுத்த மாயிருக்கும் விகிதத்தின்படியே அதன் சாட்சி கிறிஸ்துவுக்காக வலிமையா யிருக்க முடியும்".

பெரும்பாலான சபைகள் கிறிஸ்துவுக்கு வல்லமையான சாட்சியா யிருக்கிறதா? அப்படியானால் சபையின் நிலை என்ன? நாம் செய்ய வேண்டிய தென்ன?

சபையில் கழிவு நீரோடை

சபைக்குள் கழிவுநீர் ஓடுகிற தென்றால் அது மிகவும் கவனிக்கப்பட வேண்டியதாகும். ஒவ்வொருவரும் அதனால் ஏற்படக்கூடிய ஆரோக்கியக் கேடுகளைக் குறித்து அக்கரை கொள்ள வேண்டும். ஆராதனை ஒழுங்குகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும். பிரச்சனை முடிவுக்கு வருமட்டும் அனைவரும் தீவிர முயற்சியில் ஈடுபட வேண்டும்.

அசுத்தம் சபைக்குள் நுழைந்து விட்டது. கிறிஸ்தவர்கள் என்று அழைக் கப்படுகிறவர்களில் பல தீமையான காரியங்கள் காணப்படுகின்றன. வெளிப் பார்வைக்கு நன்றாகத் தோன்றுகிற சபைகளிலும், நபர்களிலும் இவை விதிவிலக்கல்ல.

இதற்கு மேலாக சில மதிப்புக் குரியவை என்று எண்ணப்படும் கழிவு நீரோடைகளும் காணப்படுகின்றன. அவை பாராமுகமாய் விட்டுவிடப் படுகின்றன. அவை அதிக அளவாகப் பொருளை செலவு செய்தல், கடன் வாங்கிவிட்டுத் திருப்பிக் கொடாம லிருப்பது, போஜனப்பிரியமும், வீண் பேச்சு, பேராசை, இச்சை, கசப்புணர்வு, பெருமை, விமர்சன ஆவி, பின்புறமாகப் பேசுதல், சுயநோக்கு, உடைபட்ட உறவுகள் போன்றவைகளாகும். தேவனு டைய மகிமையையும், பரிசுத்தத்தையும் வெளிக்காட்ட வேண்டிய சபை பாவத்தின் மறைவிடமாகிவிட்டது.

தவறிப்போன செய்தி

இன்று சபைகளில் பாவம் தொற்றுநோய் போல பரவக் காரணம் என்ன? சுவிசேஷ ஊழியம் செய்யும் சபை பாவத்தைக் குறித்தும் பரிசுத் தத்தைக் குறித்தும் பிரசங்கிப்பதைத் தவிர்த்துவிட்டது. நான் பரிசுத்த வாழ்வைக் குறித்து சமீப நாட்களில் பிரசங்கித்தபோது 'நன்றி இந்நாட்களில் நாங்கள் ஏன் இத்தகைய செய்தியைக் கேட்கவில்லை?' என்று மக்கள் கேட்கி றார்கள்.

நாமோ பழைய, புதிய ஏற்பாடு களில் தேவன் தமது பரிசுத்தத்தையும், அவருக்குப் பாவத்தின் மேலிருக்கும் வெறுப்பையும், மனந்திரும்பாத பாவி களுக்கெதிரான கோபம் மற்றும் நியாயத் தீர்ப்பு ஆகியவற்றையும் குறித்துச் சொல்லும் பகுதிகளை விட்டு விட்டு அவரது, இரக்கம், கிருபை, அன்பு ஆகிய வற்றை மட்டுமே சுட்டிக் காண்பிக் கிறோம்.

நாம் முன் வைக்கும் 'சுவிசேஷம்' பாவம் என்று அறியப்படும் பழக்கங் களை மறுக்காமலே கிறிஸ்தவனாக வாழமுடியும் என்பதாகும். கிறிஸ்தவர் கள் உலக மக்களைப் போல பார்க்கவும், சிந்திக்கவும், செயல்படவும், பேசவும் அனுமதிக்கலாம் என்ற கொள்கையை உடையவர்களாயிருக்கிறோம்.

தனியாகவும், கூட்டங்களிலும் மக்களின் பாவங்களை எடுத்துக்கூறுவது தவறு என்று எண்ணுகிறோம்.

தேவ மகிமைக்கான வாஞ்சை

நெகேமியா உலகக் கவர்ச்சியால் இழுக்கப்படாதவர். தன்னைச் சுற்றிலும் வாழ்ந்தவர்கள் பாவ உணர்வற்றவர் களாயிருந்த போதும் அவன் பாவத்தைப் பழக்கமாக்கவில்லை. தேவனுடைய பிரமாணம் அவனுடைய இருதயத்தில் எழுதப்பட்டிருந்தது. அதை அவன் அவமதித்தபோது தேவ அன்பு அவனை நெருக்கி ஏவி அதை கவனிக்கச் செய்தது.

பாரசீகத்தில் கைதியாக வாழ்ந்த யூதன் அவன். கிறிஸ்துவுக்கு முன் 444-ல் எஸ்றா ஒரு கூட்டம் கைதிகளை எருசலேமுக்குக் கொண்டுவந்தார். அவர்களால் இடிக்கப்பட்ட தேவாலயம் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டது. அது முழுவதும் பழுது பார்க்கப்படவில்லை என்ற செய்தி நெகேமியாவுக்கு எட்டிய போது அவன் தனது சொகுசான வேலையை விட்டுவிட்டு 900 மைல் தூரம் பிரயாணம் செய்து பணியிலீடு பட்டிருந்த உடன் யூதரிடம் வந்தான். சன்பல்லாத், தொபியா மற்றும் கேசேம்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

ஆகிய மூவரின் கொடிய எதிர்ப்புகளின் மத்தியில் மதில்கள் கட்டி முடிக்கப் பட்டன.

நெகேமியா யூதாவின் அதிபதி யானான். எஸ்றா பிரதான ஆசாரியனா யிருந்தான். இருவரும் மக்களுடைய கவனத்தை ஆவிக்குரிய சன்மார்க்க நெறிக்கு நேராகத் திருப்பினர். நெகேமியா 8-10 அதிகாரங்கள், மக்கள் மனந்திரும்பி தேவனது வார்த்தைக்கு நேராகத் திரும்பியபோது நீண்ட கால இடைவெளிக்குப்பின் ஏற்பட்ட எழுப்புதலைக் குறித்து விளக்குகின்றன.

எழுப்புதலின் ஒரு பகுதியாக, மக்கள் தேவனோடு ஒரு உடன்படிக்கை செய்தார்கள். மக்கள் அவிசுவாசிகளான தேசங்களோடு திருமண உறவு வைக்கா மலிருக்கவும், ஓய்வுநாளில் விற்கவும் கொள்ளவும் செய்யாமலிருக்கவும், தேவாலய தேவைகளையும் லேவியரின் தேவைகளையும் சந்திக்கவும் சபதம் செய்தார்கள்.

எருசலேமில் 12 ஆண்டுகள் சேவை செய்த பின் நெகேமியா பாரசீகம் திரும்பினான். இங்கு சில காலம் தங்கி மீண்டும் எருசலேம் சென்றபோது மக்கள் தாங்கள் செய்த உடன்படிக்கையை மீறியிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந் தான். அவர்கள் ஓய்வு நாளில் வியாபாரம் செய்தனர். தேவாலயத்தைச் சரிவர பராமரிக்கவில்லை. தங்கள் விசுவாசத்திற் குட்படாத மக்களோடு சம்பந்தம் கலந் தனர். நெகேமியா மிகவும் பாரமடைந்து அவர்களது பின்னடைவுக்காக அவர் களை எதிர்த்தான்.

சில காலத்திற்கு முன் நகரத்தின் மதில்களைக் கட்டுவதற்கு மிகவும் எதிராளியாயிருந்த அம்மோனியனான தொபியா போன்றவர்களோடு மக்கள் உறவு வைத்தனர். பிரித்தெடுக்கப் பட்ட தேவ ஜனங்கள் தொபியாவின் குடும்பத் தோடும் எலியாசீப் என்ற ஆசாரியன் குடும்பத்தோடும் நெருக்கமா யிருந்தனர்.

தொபியா தேவாலயத்தில் வசித் தான். அம்மோனியர்கள் தேவாலயத்தில் பிரவேசிக்கக்கூடாது என்ற கட்டளை மீறப்பட்டது. ஆசாரியனால் கொடுக்கப் பட்ட ஒரு ஆலய அறையில் அவன் வாழ்ந்து கொண்டிருந்தான்.

இது படிப்படியாக நடந்த மாறுதல். சத்தியத்தை நேசிப்பதற்குப் பதிலாக தங்கள் செயல்களை நியாயப் படுத்திக் கொண்டனர். இப்போது தொபியாவும் குடும்பத்தாரும் நல்லவர் களாகக் காட்சியளித்தனர். எனவே அவர்களை தேவாலயத்தை விட்டு துரத்த முடியவில்லை.

தேவனுக்கு முன்பாக பரிசுத்த வாழ்வு வேண்டும் என்று உருக்கத்தோடும் தைரியத் தோடும் அழைக்கும் கிறிஸ்தவ தலைவர்கள் எங்கே? தங்கள் இல்லங்களிலும் இருதயங் களிலும் காணப்படும் அசுத்தங்களை அகற்ற தீவிரமாய் செயல்படும் பெற்றோரும் வாலிபரும் எங்கே?

இவ்வாறு தேவனற்ற தொபியா தேவாலயத்திற்குள் வந்துவிட்டான். ஆனால் நெகேமியாவைப் போன்ற பரிசுத்த வாழ்வை விரும்புகிறவர்களால் இதை ஜீரணிக்க முடிவதில்லை. அவன் அதிக கோபமடைந்து உறுதியாக செயல்பட்டான்.

முதலாவது தொபியாவையும் அவனது உடைமைகளையும் ஆலயத் துக்குப் புறம்பாக்கி, அறைகளை சுத்தம் பண்ணக் கட்டளையிட்டான். தீமை யான அந்த சூழலை உணர்ந்து ஆசாரியர் களையும் மக்களையும் மனந்திரும்ப அழைப்பு விடுத்தான்.

அவருடைய வாஞ்சை நெகேமி யாவின் புத்தகம் முழுவதிலும் வெளிப் படுகிறது. அவன் தேவனை தொழுது கொண்ட விதம், ஜெபித்த மாதிரி, அவன் தெரிந்துகொண்ட பாதைகள், அவனது தியாகங்கள், ஜனங்களுக்காக கண்ணீ ரோடு அவன் ஏறெடுத்த பாவ அறிக்கை, தன் மனஉறுதியால் தேவனுடைய எதிரிகளைத் தாக்கியதும் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன.

சின்ன விஷயங்களிலும் அவன் பரிசுத்தத்தை நாடினான் (நெகே.5:18) வாசிக்க. பிறருடைய பாவ வாழ்வில் அவன் துணிச்சலுடன் செயல்பட்டான்.

தங்கள் பாவங்களுக்காக ஜனங் கள் ஒரு பெரிய விலைக்கிரயம் செலுத்துவதை அவன் கண்டான். பாபிலோன், பாரசீகம் போன்ற யெகோவாவை அறியாத நாடுகளில் அவர்கள் கொண்டு போகப்பட்டார்கள். அவர்கள் மனந்திரும்பி, கீழ்ப்படிந்த போது எருசலேம் திரும்பி வந்தனர். அவர்கள் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டு மிகுந்த சந்தோஷமடைந்தனர். இந்த ஆசீர்வாதங்களை இழந்து மறுபடியும் பாவ வாழ்வுக்குத் திரும்புவதால் சிறையாக்கப்பட அவன் விரும்ப வில்லை.

அவனது உடன் தலைவர்களுக் குள்ளும் அவனிடமிருந்த பரிசுத்தம் காணப்படவில்லை. ஆனால் அவன் அதைக் குறித்து அக்கரை கொள்ள வில்லை. அவன் பேர் பிரஸ்தாபத்தை விரும்பவில்லை. தேவ நாமம் மகிமைப் படுவதை மட்டுமே அவன் வாஞ்சித் தான்.

மனந்திரும்பியவர்கள் மனந்திரும்பும் காலம்

தங்களை விசுவாசிகள் என்று அழைக்கும் அனேகர் பற்பல பணி களைச் செய்தாலும் தேவனுடைய கிருபையை பாவம் செய்வதற்கு உரிமமாக்கிக் கொள்கிறோம்.

சத்திய ஆவியானவரை, எல்லா வற்றையும் அனுமதித்து இடங்கொடுக் கும் ஆவி மேற்கொண்டு விட்டது. இச்சை, பேராசை, பொருளாசை, கோபம், சுயநலம், பெருமை போன்ற தீய பண்புகள் கொஞ்சம் கொஞ்சமாக தொடர்பு கொண்டுவிட்டன. சபை களில் அவை வரவேற்கப்பட்டு இடமளிக் கப்பட்டுவிட்டன.

இழந்து போனவர்களும், பின் வாங்கிப் போனவர்களும் சபையில் சொகுசாக வாழ்கின்றனர். ஏனெனில் பாவ உணர்வோ, வாழ்வில் மாற்றமோ, தேவ பிரசன்னமோ அங்கு இல்லை.

அவிசுவாசிகளை சபையை விட்டு விலக்கிவிட வேண்டுமென நான் கூறவில்லை. பாவிகள் தூய தேவ பிரசன்னத்தில் தங்களை வித்தியாசமாகக் காணவேண்டும். தேவ ஆவியால் அவர்கள் பாவ உணர்வடையாவிட்டால் அவர்கள் மனந்திரும்ப முடியாது.

இத்தகைய நாட்களில் நெகேமியா போன்றவர்கள் எங்கே? தேவனை மிக உயர்வாக நேசித்து அவரைத் தவிர வேறு எதற்கும் பயப் படாதவர்கள் எங்கே? பரிசுத்தவான் களைப் போல குடும்பத்திலும், பணி யிலும், பேச்சிலும், பழக்கத்திலும், போக்கிலும், பொருளாதாரத்திலும், தொடர்புகளிலும் காணப்படுகிறவர்கள் யார்?

கண்ணீரால் நிறைந்த கண்களையுடைய விசுவாசிகளும், சபையில் அசுத்தத்தைக் கண்டு வேதனைப்படுகிறவர்களும், மனந்திரும்புதலின் ஈவுக் காக முழங்காலில் நிற்பவர்களும் எங்கே?

தேவனுக்கு முன்பாக பரிசுத்த வாழ்வு வேண்டும் என்று உருக்கத் தோடும் தைரியத்தோடும் அழைக்கும் கிறிஸ்தவ தலைவர்கள் எங்கே? தங்கள் இல்லங்களிலும் இருதயங்களிலும் காணப்படும் அசுத்தங்களை அகற்ற தீவிரமாய் செயல்படும் பெற்றோரும் வாலிபரும் எங்கே?

உலகம் தேவனோடு நல்லுறவு கொள்ள சபை எதிர்பார்க்கிறது; சபை தேவனோடு ஒப்புரவாகும் காலத்தை உலகம் எதிர்நோக்குவதை நாம் உணரப் போகும் காலம் எது?

தேவ ஜனமே, 'மனந்திரும்பியவர்கள்' மனந்திரும்ப வேண்டிய காலம் இது. அப்படி மனந்திரும்பும்போது மிகப்பெரிய மாற்றத்தையும் தாக்கத்தையும் உலகில் காணலாம். (எசேக்.36:23, 25, 38 ஆகிய வசனங்களைப் படிக்க)

எழுப்புதலுக்காக ஜெபிக்கிறது!
எழுப்புதலுக்காக பிரசங்கிக்கிறது!

சென்னை மாவட்டத்தில்
எழுப்புதலுக்காக இதய கதறல்
(7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : **08-10-2022** 2வது சனிக்கிழமை
காலை 10 மணி – மாலை 5 வரை

இடம் : **Zion Prayer House**
1, Lakshmipuram,
New Avadi Road, Villivakkam
Chennai 600 049

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு : **வருகையின் தூதன்**
மொபைல் : 95432 21008

தமது சபைக்காகக் கிறிஸ்துவின் அன்பு

Christ's love for his church

Charles H. Spurgeon

"…….கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து ..... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" எபேசி.5:25-27.

கிறிஸ்து தமது வாழ்வு முழுவதையும் நமக்காகத் தந்தருளினார். அவர் தமக்காக எதையும் செய்யவில்லை. நமக்காகவும், சபைக்காகவும் எல்லாவற்றையும் செய்தார். சபையை நீதியுள்ளதாக்கவும், மாதிரியாக்கவும், போதிக்கவும் உயிர்ப்பிக்கவும் அவர் தமது வாழ்வை அர்ப்பணித்தார். தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் இரட்சிப்பின் மூலம் பிதா மகிமையடைவதற்காகவே எல்லாவற்றையும் செய்தார்.

கிறிஸ்து நமக்காக மரித்தார்

தமது வாழ்வை நமக்காகச் செலவு பண்ணின அவர் நமது பாவங்களுக்காக மரித்தார். அவர் கல்வாரிச் சிலுவை மட்டும் சென்று, கைகளும் கால்களும் ஆணிகளால் கடாவப்படும்படி ஒப்புக் கொடுத்து இருதயம் ஈட்டியால் குத்தப்படும்படியாகவும் ஒப்புக் கொடுத்தார். அவர் தமது சரீரத்தை மட்டுமல்ல, அவரது ஆத்து மாவையும் ஆவியையும் கூட நமக்காக ஒப்புக் கொடுத்தார். 'என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்' என்று கதறும் அளவுக்கு பாடு அனுபவித்தார். அவரது சரீரம் காம்பு அகற்றப்பட்ட லீலி மலர் போல் வாடியது. பரிசுத்தமான மக்கள் அவரை மெல்லிய துணிகளில் பரிமளவர்க்கங்களுடன் சுற்றி யோசேப்பின் கல்லறையில் வைத்தனர். நம்முடைய பாவங்களுக்குப் பரிகாரமாக அன்பினால் தம்மைத் தியாகம் செய்தார். நம்மீதுள்ள அன்பினால் இவைகளைச் செய்தார்.

அவரது குளிர்ந்த பாதங்களை முத்தம் செய்யுங்கள். வாய்ப்பிருந்தால் அவரது உடலை மெல்லிய துணிகளில் சுற்றி நறுமணவர்க்கங்களுடன் அடக்கம் செய்திருப்பீர்கள் அல்லவா! ஆனால் அவர் இன்றும் ஜீவிக்கிறார். அவர் தமது அன்பை நிரூபிக்கும்படி நமக்காக மரித்தார். இப்போது பிதாவிடம் திரும்ப சென்றிருக்கிறார். தாம் சிறிது காலம் விட்டு வந்த மகிமையை மறுபடியும் பெற்றுவிட்டார்.

கிறிஸ்துவின் நீடித்த அன்பும் மன்றாட்டும்

பரத்திற்குச் சென்றாலும் அன்பு குறையவில்லை. இன்னும் அவர் தம்மை நமக்காகக் கொடுக்கிறார். தமது சபைக்காக அவர் மன்றாடுகிறார். சீயோனுக்காக அவர் அமைதலாயிருக்கவில்லை, எருசலேமுக்காக அவர் இளைப்பாறவுமில்லை. தமது சபை கிரீடம் தரிப்பதற்காக அவர் முட் கிரீடம் தரிக்கப்பட்டார். அவர் சிங்காசனத்தில் அமர்ந்தது சபை சிங்காசனத்தில் அமரவும் அவரது அன்பை கிரமம் கிரமமாக நிரூபிக்கவுமாகும்.

அவர் தம்மை நமக்காகக் கொடுத்த படியால் சபை ஆயத்தமாகும் போது அழைத்து தாம் ஆயத்தம் பண்ணின பரலோகத்திற்கு எடுத்துச் செல்வார். அவர் சகல மகிமையோடும் வருவார். சபையாகிய மணவாட்டி சித்திரத்தையலாடையோடும் அவரது நீதியின் மகத்துவத்தோடும் நித்திய காலமாக சந்தோஷமாக வாழப் போகிறது.

கிறிஸ்துவே

நீங்கள் கிறிஸ்துவை பற்றி எவ்வளவாக எப்படி அறிந்திருந்தாலும் அறிய வேண்டிய சத்தியம் அவர் தம்மை நமக்காக அளித்தார் என்பதே. அவர் தமது நினைவுகள், செயல்கள், ஞானம், வல்லமை, ஐசுவரியம் போன்றவற்றை மட்டுமல்ல, தம்மை நமக்காக அளித்திருக்கிறார். இதை நான் எண்ணிப் பார்க்க விரும்புகிறேன். நாம் அவரை நேசிக்க வேண்டும். அவரது கிரீடத்தையல்ல, அவரை நேசிக்க வேண்டும். தங்கமயமான தெருக்களையல்ல அவரை நேசிக்க வேண்டும். அவரே நமக்குச் சொந்தமானவர். அவரும் அவரது தலைமைத்துவமும், மனிதத்துவமும், அவரது கூட்டு நபரத்துவமும் சபைக்கு அளிக்கப்பட்டுள்ளன.

தேவனுடைய இந்த மிகப் பெரிய சத்துவத்தை நாம் முழுவதும் அறியவில்லை. தேவ ஆவியானவர் தாமே அதனை நமக்குத் தெளிவுபடுத்துவாராக. யாரேனும் உங்களை நேசித்தால் அது மகிழ்ச்சியானது. ஏனெனில் அன்பு விலையேறப்பெற்றது. விசுவாசிகளாகிய நீங்கள் கிறிஸ்துவால் நேசிக்கப்படுகிறீர்கள். இந்த அன்பினால் நீங்கள் நித்திய மாக திருமண உறவில் இணைக்கப்படுகிறீர்கள். அவரோடு நீங்கள் இணைந்திருக்கும் போது கிரமம் கிரமமாக அவரைப் போல இராஜரீக மகிமையைப் பெறுவீர்கள். எனவே அரசராகிய அவர் அரசியாகிய சபையை நித்திய காலமாகத் தம்மோடு வாழச் செய்வார்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

எனது தகப்பனார் வருகையின் தூதன் பத்திரிகையை 18 இந்திய மொழிகளில் வெவ்வேறு ஆசிரியர்களின் உதவியோடு வெளியிட்டு வந்தார்கள். இப்போது வருகையின் தூதன், தமிழ், மலையாளம், மராத்தி ஆகிய 3 மொழிகளில் மாத்திரம் வெளியாகிறது. பத்திரிகையை பதிவு செய்யும் போது அரசுக்கு நாம் கொடுக்கும் அளவிலேயே (size) பத்திரிகை அச்சிடப்பட வேண்டும். அரசின் அறிவுறுத்தல்படிதான் பத்திரிகைக்கு **சந்தா, தனிப்பிரதி விலை** போன்றவை அச்சிடப்படுகிறது.

எனது தகப்பனாரிடம் உதவி ஊழியராயிருந்த எனது ஆவிக்குரிய நண்பர் இப்போது தனியாக சென்னையில் பத்திரிகை நடத்தி வருகிறார். அவரும் இதைப்போல "செய்தித்தாள்" வடிவில் A4 அளவில் 10 பக்கங்கள் வெளியிடுகிறார். English, Tamil, Malayalam, Telugu, Hindi, Kannada, Marathi, Bengali, Gujarat, Odiya, Assamesa, Punjabi, Nepali, Urdu, Sinhala & Afrikan ஆகிய 16 மொழிகளில் அச்சிடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் பத்திரிகை வரவு செலவு கணக்கு தணிக்கைச் செய்யப்பட்டு, மத்திய அரசின் பத்திரிகை துறைக்கு அனுப்பப்பட வேண்டும்.

ஒரு சந்தர்ப்பத்தில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பத்திரிகைகளுக்கும் தபால் சலுகையை நிறுத்தினார்கள். திரும்பவும் தபால் சலுகை வழங்கப்பட்டது. 2017-ம் ஆண்டுக்கு பிறகு வருகையின் தூதன் பத்திரிகையும் இன்னும் சில பத்திரிகைகளும் தபால் சலுகையை இழந்தன. இவற்றில் நான் விரும்பி படிக்கும் ஒரு பத்திரிகையை **மாதந்தோறும்** காணிக்கை கொடுக்கிற வாசகருக்கு மாத்திரம் அனுப்புகிறார்கள். இன்னொரு பத்திரிகை **இரண்டு மாதத்திற்கு** ஒரு முறை வெளியிடுகிறார்கள். ஒரு அன்புத் தம்பி **தபால் சலுகை** இல்லாதபடியால் **இரண்டு மாதத்திற்கு** ஒரு முறை வெளியிடுவதாக எனக்கு எழுதிய கடிதத்தை அப்படியே பத்திரிகையில் அச்சிட்டிருந்தேன்.

தபால் சலுகை இல்லை என்பது அவ்வளவு பெரிய இழப்பா?

ஆம், தமிழ்நாட்டில் வெளியிடப்படும் **வேறொரு பத்திரிகை** சுமார் 1,00,000 (1 லட்சம்) பிரதிகள் அச்சிடுகிறார்கள். அந்த பத்திரிகைக்கு முன்பு தபால் சலுகை இருந்தது, இப்பொழுது இல்லை.

தபால் சலுகை இருந்தால் 1 லட்சம் பிரதிகளுக்கு தபால் செலவு ரூபாய் 25,000.

தபால் சலுகை இல்லாவிட்டால் 1 லட்சம் பிரதிகளுக்கு தபால் செலவு ரூபாய் 2,00,000 (2 லட்சம்).

வருகையின் தூதன் பத்திரிகை தபால் சலுகையை இழந்ததால், எல்லா ஊழியங்களைப் போல வருகையின் தூதன் பத்திரிகையை மாதந்தோறும் தாங்குங்கள், மாதந்தோறும் தபாலில் / வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒருமுறை குறைந்த பட்சம் ரூபாய் **500** அனுப்புங்கள் என்று வேண்டுகோள் விடுத்தேன். அநேக வாசகர்கள் இதை புரிந்து கொள்ள வில்லை!

இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஆசிரிய பணி செய்யும் ஒரு சகோதரனும், ஒரு சகோதரியும் சந்தாவாக ரூபாய் 200 அனுப்பியிருந்தார்கள். அந்த சகோதரியின் கடந்த ஆண்டு கணக்கை பார்க்கும்போது, கடந்த ஜனவரி மாதமும் ரூபாய் 200 அனுப்பியிருக்கிறார்கள். இதனால் **புதிய முகவரி பட்டியல்** தயாரிக்காமல் 2017-ம் ஆண்டு அனுப்பிய அனைவருக்கும் இந்த ஆண்டு வரை பத்திரிகை அனுப்பி வருகிறோம். இதனால் ஏற்பட்ட பணக் கஷ்டத்திற்கு அளவே இல்லை.

2023-ம் ஆண்டும் இந்த நிலைமை தொடர இயலாது என்பதால்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

வாசகருக்கு வசதியாக 3 வாய்ப்புகளை கீழே அச்சிடுகிறேன் :

I மாதந்தோறும் (M)

எல்லா ஊழியங்களைப் போல வருகையின் தூதன் ஊழியத்தையும் மாதந்தோறும் உங்கள் காணிக்கை யினால் தாங்குங்கள். சம்பளம் அல்லது பென்ஷன் வாங்குகிற தேவனுடைய பிள்ளைகள் சிரமம் பாராது, எவ்வளவு சிறிய தொகையாக இருந்தாலும் மாதந் தோறும் அனுப்புங்கள்.

1. மாதந்தோறும் சுமார் 30 முதல் 40 பக்கங்கள் புதிய செய்திகள் ஆயத்தப் படுத்த வேண்டும்.

2. மாதந்தோறும் காகித செலவு

3. மாதந்தோறும் அச்சுக்கூலி

4. மாதந்தோறும் மடிப்பதற்கான செலவு

5. மாதந்தோறும் தபால் தலைகள், Service charge, வழக்கமான தபால், கொரியர் செலவுகள்

6. மாதந்தோறும் மின் கட்டணம் (இரண்டு மாதத்திற்கு ஒரு முறை) வாகன செலவுகள் (வாரம் ஒரு முறை) தண்ணீர் கட்டணம் (3 மாதத்திற்கு ஒரு முறை) கார்ப்பரேஷன் வரிகள் (6 மாதத்திற்கு ஒரு முறை) மற்றும் **மாதாந்திர அலுவலக செலவுகள்.**

7. மாதந்தோறும் வருகையின் தூதன் ஊழியத்தைச் செய்கிறவர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும்.

"உங்களில் எவன் கூலியில்லாமல் கதவுகளைப் பூட்டுவான்" மல்கியா 1:10.

இயேசப்பா கூறுவதைக் கவனியுங்கள் :

பூமியிலே உங்களுக்குப் பொக் கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்.

பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங் கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.

உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக் கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் மத்.6:19-21.

மாதந்தோறும் ரூபாய் 50, 100, 200, 300, 500 அதற்கும் அதிகமாக வெகு சிலர் அனுப்புகிறார்கள்.

ஒரு சகோதரி **(ஆசிரியை)** மாதந் தோறும் ரூபாய் 300 அனுப்புகிறார்கள்.

ஒரு சகோதரி **(ஆசிரியை - ஓய்வு)** மாதந்தோறும் ரூபாய் 50 அனுப்பு கிறார்கள்.

II சிறப்பு காணிக்கை (S)

உங்களில் சிலர் மிகவும் உதாரத் துவமாக ரூபாய் 1000 அல்லது அதற்கு அதிகமாக அனுப்பி வருகிறீர்கள். வருடத்திற்கு வருடம் **சிறப்பு காணிக்கை** அனுப்புவோரின் எண்ணிக்கை அதி கரித்து வருவதற்காக தேவனை நன்றி யோடு ஸ்தோத்தரிக்கிறேன். நீங்களும் இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஒரு சிறப்பு காணிக்கை அனுப்பலாம்.

உங்களில் சிலர் அநேக முறை சிறப்பு காணிக்கை அனுப்புகிறீர்கள். உங்கள் காணிக்கைகள் அனைத்தும் ஆண்டவருடைய ஊழியத்திற்கு மாத்திரம் பயன்படுத்தப்படுகிறது.

III வருடம் ஒரு முறை (Y)

நான் ஏற்கெனவே எழுதி யிருந்தது போல மாதந்தோறும் தபா லில் / வங்கியில் அனுப்ப இயலாதவர் களுக்கான ஒழுங்கு இது. சிலருக்கு இப்போதையை தபால் முறைப்படி மணியாடர் அனுப்ப தெரியாது. சிலருக்கு வங்கி வழியாக, மொபைல் மூலமாக பணம் அனுப்ப தெரியாது. சிலருக்கு ஆள் வசதி கிடையாது. சிலருக்கு வயது அதிகமானதால் மாதந் தோறும் அனுப்ப இயலவில்லை.

உதாரணமாக சில வருஷங்கள் மாதந்தோறும் ரூபாய் 100 அனுப்பிக் கொண்டிருந்த ஒரு சகோதரி **வருடத் திற்கு ஒரு முறை** ரூபாய் 1200 அனுப்பி னார்கள் என்று ஏற்கெனவே எழுதி யிருந்தேன். அது போல அநேக வருடங் கள், மாதந்தோறும் ரூபாய் 50 அனுப்பிக் கொண்டிருந்த ஒரு சகோதரர் **வருடத்திற்கு ஒருமுறை** ரூபாய் 600 அனுப்பி வருகிறார்.

மேலும் விபரங்களுக்கு : **95432 21008**
94897 40295

தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் **அன்புகூர்ந்தார்** யோவான் 3:16.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

அன்பு கூராமல் கொடுக்க முடியும், ஆனால் கொடுக்காமல் அன்பு கூர முடியாது.
-ஏமி கார்மிக்கேல்

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **Jesus Care's Assembly**
3,Padi Pudhu Nagar, 10th Street, Anna Nagar West Extn.
Chennai 600 101 Cell: **98411 32981,** Ph.: **26564349**

நாள் : **17.09.2022,** 3-வது சனிக்கிழமை

நேரம் : காலை 10.00 மணி முதல்
மாலை 05.00 மணி வரை

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு : **வருகையின் தூதன்** மொபைல் : 9543221008

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

மக்கள் தங்கள் வாழ்க்கை முறையைப் மாற்றாவிடில், நிச்சயமாக அவர்கள் மனந்திரும்பியிருக்க முடியாது என்பதே. அப்படி நாம் மனந்திரும்பாவிட்டால் நமது பாடல்களாலும், துதிகளாலும், ஜெபங்களாலும் எந்த பயனுமில்லை.

அனேக ஜெபக் கூடுகைகளும், நிகழ்வுகளும் ஆவிக்குரிய எழுப்புதலுக்கு நேராக வழிநடத்துகின்றன. ஆனால் ஏதோ ஒன்று குறைவு படுகிறது.

சன்மார்க்க நெறியில் தடுமாறும் இந்நாட்களில், மக்கள் தாங்கள் சரி என்பதை சரி என்றே எடுத்துக் கொள்கிறார்கள்.

புதிய அங்கத்தினர்களை சேர்த்துக் கொள்வதற்காக அவர்களைக் கவர்ந்துகொள்ள அவர்கள் வழியிலே சாய்வது இன்று திருச்சபைகளில் காணப்படும் குறைபாடு.

சபைக்குள் கழிவுநீர் ஓடுகிற தென்றால் அது மிகவும் கவனிக்கப்பட வேண்டியதாகும். ஒவ்வொருவரும் அதனால் ஏற்படக்கூடிய ஆரோக்கியக் கேடுகளைக் குறித்து அக்கரை கொள்ள வேண்டும்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason